தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 12, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 205, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு."

இடைவிடாமல் முயற்சி மேற்கொண்டு வளம் பெறும் நாடுகளைவிட, இயற்கையிலேயே எல்லா வளங்களையும் உடைய நாடுகள் சிறந்த நாடுகளாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 162, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

163—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***14291—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில், தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ஒன்பது அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 18 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், திருநெல்வேலி மாவட்டம், மானூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, 2022–2023 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்படவுள்ளது. இதைத் தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், 12 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் மற்றும் ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 14 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் புதியதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்றவுடன் இந்தக் கேள்வி போடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாக கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் கோரிக்கையாக இதனை நிறைவேற்றித் தந்தார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நன்றி சொல்லிவிட்டேன். இருந்தாலும், இரண்டாவது முறையாக நன்றி சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 2 தினங்களுக்கு முன்பு திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் கோயிலுக்கு 30 கோடி ரூபாய் செலவில் எல்லா திட்டங்களையும் தந்திருக்கிறார். தினமும் 500 பேருக்கு உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் மற்றும் முதியோர்களுக்கு உண்ண உணவும், உறைவிடமும் 30 கோடி ரூபாய் செலவில் தந்திருக்கிறார்கள்.

2022 ஏப்ரல் 25]

அதேபோல, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, புறவழிச்சாலை வெகுவிரைவிலே அமைத்துத் தரப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார். ஏற்கெனவே ரூ.15 கோடி செலவில் திருநெல்வேலியில் ஆதிச்சநல்லூர் ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தரப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து, திருநெல்வேலி தொகுதிக்கு கட்சி பாராமல், நாளும் திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

164—

சாலையை அகலப்படுத்துதல்

***12635—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் முதல் பரமத்தி-வேலூர் செல்லும் சாலை, குப்பம்பாளையம் முதல் வள்ளிபுரம் வரை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் நகரிலிருந்து குப்பம்பாளையம் வழியாக பரமத்தி–வேலூர் வரை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் நாமக்கல்லிலிருந்து குப்பம்பாளையம் வழியாக வள்ளிபுரம் வரை 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்த 5 கிலோ மீட்டர் தூரமும் கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலையாகும். இது இருவழித் தடமாக இருந்தது. இதனை நான்கு வழித்தடமாக 2021–2022 ஆம் நிதியாண்டில் CRIDP *மூலமாக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, இப்பொழுது பணி துவங்கும் நிலையில் உள்ளது.*